**24.09.2024**

**அ.வ.எண். 83/2020**

**<u>வா.சா.1 ஜீவபிரியா அவர்களின் 1ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

1. தாவா சர்வே எண் திருத்துவதற்காக நான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். என்ன சர்வே எண் திருத்த வேண்டும் என்றால் சர்வே எண்.82/2சி1 க்கு பதிலாக சர்வே எண்.82/2சி2 என திருத்த வேண்டும். சர்வே எண்.82/2சி 1 க்கு இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். இதே நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.57/2021 சர்வே எண்.82/2சி2 விற்காக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அந்த வழக்கினை நான் நடத்தாத காரணத்தினால் தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் எனக்கு தெரியாது.

2. இந்த வழக்கின் பிராதுவில் தாவா சொத்தின ஐக்குபந்தி குறிப்பிடவில்லை என்றால் சரிதான். சர்வே எண்.82/2சி ன் மொத்த விஸ்தீரணம் பிராதுவில் நான் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.1ல் சொல்லியுள்ள கிணறு, மின்மோட்டார் பம்பு செட், மின்இணைப்பு 171 ஆகிய விவரங்களை எனது பிராதுவில் சொத்து விவரத்தில் நான் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.1ல் குறிப்பிட்டுள்ள சொத்து விவரத்தினை இந்த வழக்கில் நான் குறிப்பிடாததாலேயே இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

3. சர்வே எண்.82/2சி2 1ம் பிரதிவாதியின் பூர்வீக சொத்து என்றால் சரிதான். அதில் 1ம் பிரதிவாதியின் வாரிசுதாரர்களுக்கும் உரிமை உண்டு என்றால் சரிதான். சர்வே எண்.82/2சி2 1ம் பிரதிவாதியின் தனிப்பட்ட சொத்து இல்லை என்றால் சரிதான். பாகப்பிரிவினை மூலமாக அவருக்கு கிடைக்கப்பெற்ற சொத்து. சர்வே எண்.82/2சி2 ல் 1ம் பிரதிவாதியின் வாரிசுதாரர்களுக்கும் உரிமை உள்ளதால் அவர்கள் இந்த வழக்கில் அவசிய தரப்பினர் என்றாலும் அவர்கள் தரப்பினர்களாக சேர்க்காமல் இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளதால் இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றாலும் சரியல்ல. வா.சா.ஆ.1ல் சொல்லப்பட்டுள்ள சர்வே எண்.81/2 ல் 70 செண்டின் ஐக்குபந்தி எனக்கு தெரியும். கிழக்கு பக்கம் நவநீதம்மாள் நிலம், மேற்கு பக்கம் ராமாபுரம் செல்லும் சாலை, தெற்கு பக்கம் நவநீதம்மாள் நிலம் மற்றும் வரதா நிலம், வடக்கு பக்கம் ஜெயராம ரெட்டியார் நிலம்.

4. வா.சா.ஆ.1 ல் சொத்து விவரத்தில் "பழைய சர்வே எண்.82/2 சி யில் புதிய " என்ற வாசகம் கையால் எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் கிரையம் வாங்கிய காலத்தில் சர்வே எண்.82/2சி1 1ம் பிரதிவாதிக்கு உரிமையில்லாத சொத்து என்றால் சரிதான். அவர் அதை தனபால் என்பவருக்கு விற்பனை செய்துவிட்டார். சர்வே எண்.82/2சி எப்போது உட்பிரிவு செய்யப்பட்டது என்று எனக்கு தெரியாது. சர்வே எண்.82/2சி ன் மொத்த விஸ்தீரணம் 1ஏக்கர் 55 செண்ட்.

(பிரதிவாதி வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது)